கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 28.03.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிலையான மண் மேலாண்மை : மண் வளம், கார்பன் வரிசைப்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றம் தணித்தல் என்ற சொற்பொழிவு**

விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்களிடையே காலநிலை மாற்றத்தின் பின்னனியில் மண் வள மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், "நிலையான மண் மேலாண்மை: மண் வளம், கார்பன் வரிசைப்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றம் தணித்தல்" என்ற தலைப்பில் முதன்மையர் (முதுகலை அறிவியல்) அறக்கட்டளை சொற்பொழிவானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் மூலம் நடத்தப்பட்டது.

இந்த விரிவுரைக்கான வரவேற்புறை மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் தலைவர் முனைவர்.து.செல்வி வழங்கினார். இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினரான முனைவர்.சோமசுந்தரம் ஜெயராமன், தலைவர் மற்றும் முதன்மை விஞ்ஞானி (இ.வே.ஆ.நி), இந்திய மண் மற்றும் நீர்பாதுகாப்பு நிறுவனம் உதகமண்டலம், நீலகிரி தமிழ்நாடு அவர்களை இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர்.பாலசுப்ரமணியம் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இவர் 10 முதுகலை, 4 முனைவர் மற்றும் 5 இளம் விஞ்ஞானிகளுக்கு வழிகாட்டியுள்ளார் மற்றும் 100 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச பத்திரிக்கைகளில் வெளியிட்டுள்ளார்.

முனைவர்.வெ.கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் வளமான மண்ணின் முக்கியவத்தை சுட்டிக்காட்டினார். பல்வேறு ஆராய்ச்சி மற்றும் செயல்பாடுகள் மூலம் மண் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி மண் வளத்தை பாதுகாப்பதில் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பங்கை விவரித்தார். காலநிலை சகாப்தத்தில் நிலையான மண் மேலாண்மை நடைமுறைகளின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

முனைவர்.சோமசுந்தரம் ஜெயராமன், தலைவர் மற்றும் முதன்மை விஞ்ஞானி (இ.வே.ஆ.நி), இந்திய மண் மற்றும் நீர்பாதுகாப்பு நிறுவனம், உதகமண்டலம், நீலகிரி தமிழ்நாடு அவர்கள் நிலையான மண் மேலாண்மை பற்றியும், அதன் முக்கியத்துவம் மற்றும் காலநிலை மாற்றத்ததைத் தணித்தல் தொடர்பான சொற்பொழிவை வழங்கினார். மேலும் பங்கேற்பாளர்களின் கேள்விகளுக்கும் முதுகலை மாணவர்களின் கேள்விகளுக்கும் துல்லியமான பதில்களை வழங்கினார். மண்அரிப்பு மற்றும் சீரழிவை குறைத்தல், அதனை மேம்படுத்துவதற்கான அணுகுமுறைகள் விவாதிக்கப்பட்டது.

மேலும் இவர் ஊட்டச்சத்து சுழற்சி மற்றும் காலநிலை மாற்றத்தைத் குறைத்தல் பற்றி விவரித்தார். விவசாயம், வனம், மீன்பிடி, சுகாதாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்துறை போன்ற துறைகளுக்கும் நிலையான மண் மேலாண்மை அவசியம் என்று வலியுறுத்தினார். நிகழ்காலம் மற்றும் வருங்கால சந்ததியினருக்கு மண்வளத்தைப் பேணி பாதுகாப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இறுதியாக முனைவர்.க.சத்தியபாமா, பேராசிரியர் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**